# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.12/2023** **நாள் : 23.02.2023**

**வேளச்சேரி–தாம்பரம் சாலையில் (தேசிய காற்று சக்தி நிறுவனம் (NIWE) எதிரில்) மடிப்பாக்கம் விரிவான குடிநீர் வழங்கல் திட்டத்திற்கான இணைப்புப் பணி, வேளச்சேரி–தாம்பரம் பிரதான சாலை மற்றும் மேடவாக்கம் பிரதான சாலை சந்திப்பில் நெம்மேலியில் உள்ள நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீர் சுத்திகரிப்பு குடிநீர் குழாய் இணைப்பு பணி மற்றும் வெட்டுவான்கேணி தேவாலயத்திற்கு எதிரில் ஒக்கியம்–துரைப்பாக்கம் விரிவான குடிநீர் வழங்கல் திட்டத்திற்கான இணைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் 25.02.2023 அன்று காலை 6 மணி முதல் 26.02.2023 அன்று காலை 6 மணி வரை பகுதி–13, 14 மற்றும் பகுதி–15 ஆகிய பகுதிகளில் குழாய்கள் மூலம் வழங்கும் குடிநீர் விநியோகம் நிறுத்தம்**

**சென்னை குடிநீர் வாரியம் தகவல்**

வேளச்சேரி-தாம்பரம் சாலையில் (தேசிய காற்று சக்தி நிறுவனம் (NIWE) எதிரில்) மடிப்பாக்கம் விரிவான குடிநீர் வழங்கல் திட்டத்திற்கான இணைப்புப் பணி, வேளச்சேரி-தாம்பரம் பிரதான சாலை மற்றும் மேடவாக்கம் பிரதான சாலை சந்திப்பில் நெம்மேலியில் உள்ள 150 எம்.எல்.டி கடல்நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து குடிநீர் கொண்டு செல்லும் 1200 மி.மீ விட்டமுள்ள குடிநீர்க் குழாயுடன் 110 எம்.எல்.டி கடல்நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து குடிநீர் கொண்டு செல்லும் 800 மி.மீ விட்டமுள்ள குடிநீர்க் குழாயினை இணைக்கும் பணி மற்றும் வெட்டுவான்கேணி தேவாலயத்திற்கு எதிரில் ஒக்கியம்-துரைப்பாக்கம் விரிவான குடிநீர் வழங்கல் திட்டத்திற்கான இணைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் நெம்மேலியில் உள்ள 110 எம்.எல்.டி உற்பத்தி திறன் கொண்ட கடல்நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படவுள்ளது. எனவே, பகுதி-13, 14 மற்றும் பகுதி-15 ஆகிய பகுதிகளுக்குட்பட்ட கீழ்கண்ட இடங்களில் 25.02.2023 அன்று காலை 6 மணி முதல் 26.02.2023 அன்று காலை 6 மணி வரை குழாய்கள் மூலம் வழங்கும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பகுதி-13<br>(அடையாறு) | தரமணி, கோட்டூர் கார்டன்,<br>ஆர்.கே.மடம் தெரு, வேளச்சேரி<br>மற்றும் இந்திரா நகர் OHT |
| பகுதி-14<br>(பெருங்குடி) | கொட்டிவாக்கம், பாலவாக்கம்,<br>பெருங்குடி, பள்ளிக்கரணை,<br>மடிப்பாக்கம் மற்றும் புழுதிவாக்கம் |

| | |
|---|---|
| பகுதி-15<br>(சோழிங்கநல்லூர்) | ஈஞ்சம்பாக்கம், நீலாங்கரை, அக்கரை, வெட்டுவான்கேணி, சோழிங்கநல்லூர், செம்மஞ்சேரி மற்றும் ஒக்கியம்-துரைப்பாக்கம். |

எனவே, பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக, வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் (Dial for Water) குடிநீர் பெற்றுக்கொள்ள வாரியத்தின் https://chennaimetrowater.tn.gov.in/ என்ற இணையதள முகவரியினை பயன்படுத்தி பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம். மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம்போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்